# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மகப்பேற்று நன்மைகள் (திருத்தம்)

***(140 ஆம் அத்தியாயமான) மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே அவர்களால் 2024, ஓகத்து மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, யூலை மாதம் 31 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

***[ 290 ஆம் சட்டமூலம் ]***

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**(140 ஆம் அத்தியாயமான) மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மகப்பேற்று நன்மைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது அப்பிரிவில் (1) (இ) மற்றும் (1) (ஈ) ஆகிய பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

> (1)(இ) கர்ப்பத்தின் முதல் இருபத்தி எட்டு வாரங்களில் கருச்சிதைவு ஏற்பட்டால் கருச்சிதைவு ஏற்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்கள்; மற்றும்
>
> (1)(ஈ) சட்டபூர்வ அல்லது மருத்துவ காரணங்களின்கீழ் கருக்கலைப்பு செய்யப்படும் சந்தர்ப்பங்களில், கருக்கலைப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்கள்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.